**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.**

**CC.No.83/2021 Date: 06.11.2025**

**PW 1 : திரு.முருகேசன் த/பெ. சுப்ரமணி**

துவக்க நேரம் 12.55 A.N

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) புகாரை நான்தான் எழுதிக்கொடுத்தேனா என்றால் இல்லை, எனக்கு தெரிந்தவரை வைத்து காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்தேன். புகாரில் உள்ள வாக்கியம் முடியும் வரிக்கும், எனது கையொப்பத்திற்கும் இடையே இடைவெளி உள்ளதா என்றால் உள்ளது. எனது கையெழுத்திற்கும், போலிசார் புகாரை receive செய்வதற்கும் இடையே இடைவெளி உள்ளதா என்றால் உள்ளது.

2) மாதிரி வரைபடத்தின்படி, விபத்து, நாகியம்பட்டியிலிருந்து தம்மம்பட்டி செல்லும் தார்சாலையில்தான் நடந்துள்ளது என்று சொன்னால் சரிதான். நான், எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல்தான், புகாரை எழுதும்பொழுதும், எனது போலிசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் ஆமாம்.

3) மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறுதான், மோகனா பெட்டிக்கடை உள்ளது என்று சொன்னால் சரிதான். மாதிரி வரைபடத்தின்படி, அந்த பெட்டிக்கடையின் வாயிற்படி தென்புறம் பார்த்தவாறு உள்ளது என்று சொன்னால் தவறு.

4) நான், மளிகை ஜாமான்களை வாங்கிக்கொண்டிருந்தபொழுதுதான் இவ்விபத்து நடந்ததா என்றால் ஆமாம். எனது மகன் அடிபட்ட பிறகு சத்தம் கேட்டுத்தான் இவ்விபத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். மளிகைக்கடைக்கும், விபத்து நடந்த இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் 10 அடி தூரம் இருக்கும்.

5) விபத்து நடந்து எத்தனை நாட்கள் கழித்து போலிசார், சம்பவயிடத்திற்கு வந்தார்கள் என்றால் கால்மணிநேரம் கழித்து வந்தார்கள். போலிசார் வந்தவுடன், எனது மகனை நான், மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேனா என்றால் முதலில் காவல் நிலையத்திற்கு சென்றேன், பிறகுதான் மருத்துவமனைக்கு சென்றேன்.

6) விபத்து நடந்த இடத்தில் ரத்தக்கறைகள் படிந்திருந்ததா என்றால் படிந்திருந்தது. போலிசார், சம்பவயிடத்திற்கு வந்தபொழுது அந்த லாரி அங்குதான் இருந்ததா, அதன் டிரைவர் அங்குதான் இருந்தாரா என்றால் ஆமாம். விபத்து எத்தனை மணிக்கு நடந்தது என்றால் காலை 09.30 மணிக்கு நடந்தது.

7) விபத்து நடந்த இடத்திற்கு போலிசார் வந்தவுடன், எனது மகனை போலிசாருடன் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துவிட்டு, நான் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றேனா என்றால் ஆமாம். விபத்து நடந்து போலிசார் 15 நிமிடத்தில் சம்பவயிடத்திற்கு வந்துவிட்டார்களா என்றால் ஆமாம்.

8) விபத்து நடந்தவுடன், போலிசார் காவல் நிலையத்திற்கு சென்றவுடன் நான் அவர்களுக்கு பின்னாலே சென்றேனா என்றால் ஆமாம். போலிசார் சம்பவயிடத்திற்கு வந்து, சம்பவத்தை பார்த்துவிட்டு, உடனே சென்றுவிட்டார்களா என்றால் ஆமாம்.

9) அதற்கு பின்னிட்டு சம்பவயிடத்திற்கு போலிசார் வந்தார்களா என்றால் இல்லை. லாரி எங்கிருந்து வந்தது என்றால் வடக்கிருந்து வந்தது. விபத்து ஏற்படுத்திய லாரி நாகியம்பட்டி ரோட்டிலிருந்து வந்து வடபுறமாக சென்று பின் பின்புறமாக லாரி வந்து, மேற்குபுறம் திரும்பும்பொழுதுதான் இந்த விபத்து நடைபெற்றது என்று சொன்னால் சரிதான்.

10) அந்த ரோடு எத்தனை அடி என்றால் 15 அடி இருக்கும். வடபுறமாக லாரி திரும்பிய குறுக்கு சாலை 15 அடி இருக்கும் என்றால் சரிதான். நாகியம்பட்டியிலிருந்து தம்மம்பட்டி செல்லும் தார்சாலை 15 அடி இருக்கும் என்றால் சரிதான்.

11) விபத்து எந்த இடத்தில் நடந்தது என்றால் மோகனா கடை முன்பாக நடந்தது. விபத்து எந்த ரோட்டில் நடந்தது என்றால் மோகனா கடை முன்பாக உள்ள சின்னரோட்டில்தான் நடந்தது. இந்த விபத்து நடந்தபொழுது எனது மகனுக்கு என்ன வயசு என்றால் 7 வயது.

12) பொதுவாக, ஒரு லோடு வண்டி வந்து, மற்றொரு ரோட்டில் வளைந்து, ரிவர்ஸ் வரும்பொழுது எவ்வளவு வேகத்தில் வரும் சென்றால் மெதுவாகவும் செல்லும், வேகமாகவும் செல்லும், அது வண்டி ஓட்டுவதை பொறுத்தது. நான் சொன்னவாறு, சம்பவயிடத்தில் வண்டி அதிவேகமாக வந்து இடிப்பதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல.

13) இந்த விபத்து, லாரியின் பின்புறமாக இடித்ததால் ஏற்பட்டதா என்றால் ஆமாம். இந்த விபத்து, லாரியின் பின்புறத்தில் எந்த பக்கம் நடந்தது என்றால் இடதுபக்கம் நடந்தது. இந்த விவரத்தை, நான் கொடுத்த புகாரில் சொல்லவில்லை என்றும், புகாரை நான் எனது கைப்பட எழுதாததால் இந்த விவரம் அதில் உள்ளதா என்று எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல, புகாரை நான் படித்துபார்த்துதான் கையெழுத்து போட்டேன்.

14) லாரியின் பின்புறம் விபத்து நடந்ததாக, நான் கொடுத்த புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய மகன் சின்ன பையன் என்பதால் அவரது அறியாமையால், எனது மகன் லாரி வருவதை கவனிக்காமல் சென்றதால்தான் இந்த விபத்து நடந்தது என்று சொன்னால் சரியல்ல, நான் பொருள் வாங்கிக்கொண்டிருந்தபொழுது, என் மகனின் சத்தம் கேட்டவுடன் திரும்பி பார்த்தேன், வண்டி, எனது மகனின் மண்டையில் ஏறியிருந்தது, சம்பவயிடத்திலேயே என் மகன் இறந்துவிட்டான்.

15) எனது புகாரில், "மோகனா பெட்டிக்கடையில் வீட்டு ஜாமான்கள் வாங்குவதற்காக வந்து, நான் பெட்டிக்கடையில் பொருட்களை வாங்கிக்கொண்டிருந்தேன், என் மகன் பெட்டிக்கடை அருகில் உள்ள மண்சாலையில், பிள்ளையார் கோவிலுக்கு அருகில் நின்றிருந்தான்" என்று

குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த விபத்து லாரி ஓட்டுனரின் அஜாக்கிரதையாலும், அதிவேகத்தாலும் நடைபெறவில்லை என்றும், எனது மகன் அறியாத வயது என்பதால் எனது மகன் சாலையில் நடுவில் சென்றதால்தான் இந்த விபத்து நடந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல.

16) நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் இந்த விபத்து நடைபெறவில்லை என்றும், நான் சொன்ன நேரத்தில் போலிசார், சம்பவயிடம் வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கும், எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், போலிசார், என்னை விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 01.35 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.11.06 16:50:19 +0530

Judicial Magistrate No.2, Attur.